JUDICIAL ÂCADEMY ... 

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 141/2020 |
| Prosecution Witness | : | **அ.சா.1** |
| Name | : | **மதிவாணன்** |
| Father's/Husband Name: | : | மாரிமுத்து |
| Address : | : | நக்கசேலம் |
| Age | : | 41/2022 |

**தேதி: 06/07/2022**

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் கன்சல்டண்டாக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். மேலும் பிற எதிரிகளையும் எனக்கு தெரியும்.என்னிடம் காண்பிக்கப்படும் இந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் என்னால் கொடுக்கப்பட்டது தான். புகார் **அ.சா.ஆ.1.** எனது சொந்த ஊர் நக்கசேலம். நான் தற்போது குடும்பத்துடன் சென்னையில் வசித்து வருகிறேன். நான் எனது சொந்த ஊரில் நிலம் வாங்குவதற்காக கனகராஜ் என்பவரிடம் கூறியிருந்தேன். கனகராஜ் என்பவர் பக்கத்து ஊரை சேர்ந்த பொன்னர் என்பவரிடம் நிலம் உள்ளதாகவும், அதை வாங்கி கொடுப்பதாகவும் என்னிடம் கூறினார். பொன்னரும், அவரது நண்பரான இரூரை சேர்ந்த அழகேசன் என்பவரும் சேர்ந்து ரியல் எஸ்டேட் செய்வதாக கூறி அழகேசனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். பொன்னர் என்பவர்

பக்கத்து ஊரை சேர்ந்த முத்துவீரராம செட்டியார் என்பவரின் நிலத்தை பேசி வைத்திருப்பதாகவும், அதற்கு பதிவு செய்யப்படாத ஒரு கிரய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தி வைத்திருப்பதாகவும், அந்த நிலத்தை ஒரு ஏக்கருக்கு ரூ.1,50,000/-க்கு விற்பதாகவும், என்னிடம் கூறினார். அதற்கு முன்பணமாக அழகேசன் மற்றும் அவரது மனைவி மீனாவின் இணைப்பு வங்கி கணக்கு வைத்துள்ள ICICI வங்கி சிறுவாச்சூர் கிளையிலும், கனகராஜ் மனைவி மகாலட்சுமி என்பவரது ஆக்ஸிஸ் வங்கி கணக்கிலும் என்னை செலுத்துமாறு கூறினார். அதன்படி நான் அழகேசன் மற்றும் மீனாவின் இணைப்பு வங்கி கணக்கில் 8 தவணையாக ரூ.3,72,000/-ம், மகாலட்சுமி வங்கி கணக்கில் 3,4 தவனைகளாக ரூ.43,000/-ம் செலுத்தினேன். மீதம் ரூ.82,000/-ஐ பொன்னரிடம் ரொக்கமாக நான் செலுத்தினேன். அந்த பணத்தை பெற்ற பின்பு எனக்கு அந்த கிரய பத்திரத்தை ஏற்படுத்திக் கொடுக்காமல் சாக்கு போக்கு சொல்லி வந்தனர். பொன்னரிடம் கேட்டால் அழகேசனிடம் கேட்க வேண்டும் எனவும், அவர் கனகராஜிடம் கேட்க வேண்டும் எனவும் மாறி மாறி இழுத்தடித்து வந்தனர். அதனால் நான் சந்தேகம் அடைந்து அந்த இடத்தை சென்று பார்வையிட்டு விசாரித்த போது அந்த இடம் வேறொருவருக்கு சொந்தமானது என நான் தெரிந்துக் கொண்டேன். மேலும், மணிமாறன் என்ற பத்திர எழுத்தர் மூலமாக இந்த ஆவணம் பொய்யாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என நான் தெரிந்துக் கொண்டேன். இது சம்மந்தமாக நானும், என் மனைவியும் பொன்னரிடம் சென்று கேட்ட போது, என்னை அடிக்க வந்தார். மேலும் தகாத வார்த்தையால் திட்டினார்கள். மீண்டும்

நக்கசேலத்திற்கு சென்று அழகேசன், கனகராஜ் மற்றும் பொன்னர் ஆகியோரிடம் எனது பணத்தை திரும்ப கேட்டேன். ஆனால் அவர்கள் தர மறுத்தனர். உன்னால் முடிந்ததை பார்த்துக் கொள் என கொலைமிரட்டல் விடுத்தனர். அதனால் நான் இது சம்மந்தமாக மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். அந்த புகார் பெரம்பலூர் மாவட்ட குற்றப்பிரிவிற்கு பரிந்துரை செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் காவல்துறையினர் என்னை விசாரித்தனர். எனது வீட்டை அடமானம் வைத்து HDFC வங்கியில் பெற்ற பணத்தை நான் இவர்களுக்கு செலுத்தினேன். இந்த மன உளைச்சலால் நான் வாங்கிய பணத்தை கூட செலுத்தமுடியாமல் உள்ளேன். எனவே எதிரிகளின் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை :( 1 முதல் 3 மற்றும் 5 முதல் 7 எதிரிகள் தரப்பில்)**

சாட்சிக்கு ரூ.200/- வீதம் மேற்கண்ட எதிரிகள் செலவு தொகையாக மொத்தம் ரூ.1200/- செலுத்துவதாகவும், குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டதால் குறுக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை :( 4 எதிரி தரப்பில்)**

இல்லை.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

***Sd/-***

Judicial Magistrate No.I,
Perambalur.

JM.I.PBLR